## குடியரசுத் தலைவருடைய கண்ணியம் பாதிக்கப்படும்போது

# எதிர்க்கட்சிகள் கேட்பதற்கான உரிமை இருக்கிறது!

## ‘நியூஸ் 7’ தொலைக்காட்சி ‘கேள்வி நேரம்’ நிகழ்ச்சியில் ‘புதிய நாடாளுமன்றக் கட்டிடம் திறப்பது’ குறித்த விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் வாதம்!

**சென்னை, மே 28–**

**‘நியூஸ் 7’ தொலைக்காட்சியில் ‘கேள்வி நேரம்’ நிகழ்ச்சியில் ‘புதிய நாடாளுமன்றம் கட்டிடம் திறப்பது’ குறித்த விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் விவாதத்தின் போது புதிய நாடாளுமன்றத்தை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை அழைத்து திறப்பதுதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சரியான வழிமுறையாகும் என்றும், குடியரசுத்தலைவருடைய கண்ணியம் பாதிக்கப்படும்போது, எதிர்க்கட்சிகள் கேட்பதற்கான உரிமை இருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.**




‘நியூஸ் 7’ தொலைக்காட்சியில் “நாடாளுமன்ற கட்டிட திறப்பு விழா புறக்கணிப்பு; எதிர்க்கட்சிகளின் முடிவு ஏற்புடையதா?” என்ற தலைப்பில் நடைபெற்ற ‘கேள்வி நேரம்’ விவாதத்தில் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் தொடக்க விவாதம் வருமாறு:-

நாடாளுமன்றம் புதிய கட்டிடம் திறப்பது என்பது ஒரு நல்ல விஷயம் தான். அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. இது காங்கிரஸ் ஆட்சி காலத்தில்; பா.ஜ.க. பாஷையில் சொல்ல வேண்டும் என்று சொன்னால், இதற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது என்று சொல்லலாம்.

இப்போது இதனை கட்டி முடிச்சு இருக்காங்க. இது நல்ல விஷயம் தான். இதற்கு மரபு என்று எதுவும் இல்லை. இதுக்கு முன்னால எந்த பாராளுமன்றமும் கட்டல. அனெக்ஸ் நூலகம் என்று பிற கட்டிடங்கள் கட்டி இருந்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உட்காரும் இடம்தான்; அந்த சேம்பர் தான்; பாராளுமன்றமாக கருதப்படும். அதற்குத்தான் டாக்டர் அம்பேத்கர் சொன்ன மாதிரி உணர்வுள்ள ஜனநாயகத்தை பிரதிபலிக்கக்கூடிய ஒரு விஷயமாக இதனை நாம் பார்க்கிறோம்.

புதிய பாராளுமன்றத்தை, ஒரு பெரும்பான்மை பெற்ற கட்சியின் அங்கமாக இருக்கும் பிரதமர் இதனைத் திறக்கிறார். ஆனால் முப்படைகளின் தலைவராக குடியரசுத் தலைவராக இருக்கிறார். முதல் குடிமகனாக இருக்கிறார். அரசியல் சட்ட அடிப்படையில், இந்தியாவிற்கே தலைமை தாங்குகின்றவராக இருக்கிறார். அவரை நியமித்ததில் பெருமைபட்டுக் கொள்ளும் பா.ஜ.க.... இவரை வைத்து திறப்பது தானே முறை.

‘நாங்கள் ஒரு மலைசாதி பெண்மணியை ஜனாதிபதியாக நியமித்து இருக்கோம்’ அப்படி என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது பா.ஜ.க.. அந்தப் பெருமை பட்டுக்கொள்கின்ற, அதே நேரத்தில், அதே மலைசாதி பெண்மணியை வைத்து நாடாளுமன்றத்தை திறந்து இருந்தால், பிரதமர் மோடியின் பெருமை இன்னும் கொஞ்சம் உயர்ந்து இருக்கும்.

**நெறியாளர்:** பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்த மோடி அவர்கள் திறப்பதினால் என்ன பிரச்சினை?

**மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்:** குடியரசுத் தலைவர் அரசியல் சட்டப்படி முதன்மை பெண்மணியாக இருக்கிறார். இரு சபைகளுக்கும் அதிபராகவும் இருக்காங்க அவங்க. அப்படி இருக்கும் போது அவர்களை வைத்து திறப்பது தான் பாராளுமன்ற ஜனநாயகத்தில் ஒரு சரியான வழிமுறையாக இருக்கும்.

நீங்கள் திருப்பி திருப்பி கேள்வி கேட்கிறீர்கள். குடியரசுத் தலைவர் அவர்கள் ஆளுநர் மாதிரி நியமிக்கப்படுபவர் அல்ல. அவர் மக்கள் பிரதிநிதியாக இன்டைரக்டாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், ராஜ்யசபா எம்.பி.க்கள் என்று குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதனால் குடியரசுத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றே சொல்லலாம். ஆனால் கவர்னர் நியமிக்கப்படுபவர். கவர்னருக்கு ஒரு அதிகாரமும் கிடையாது என்று அம்பேத்கர் பல தடவை சொல்லியிருக்கிறார். உச்சநீதி மன்றமும் இப்போது பல தடவை சொல்லி இருக்கின்றது.

**நெறியாளர்:** சட்டமன்றத்தை கூட்டவும், நிறுத்தி வைக்கவும் அதிகாரம் பெற்றவர் ஆளுநர்.

**மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்:** அது அவருடைய டூட்டி, அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்ட அதிகாரம் கிடையாது. அது ஒரு டூட்டி. அதற்காகத்தான் டாக்டர் அம்பேத்கர் கூறினார், 107 குறித்து டிஸ்கஸ் செய்யும்போது, அரசியல் சட்டம் கவர்னருக்கென்று எந்த அதிகாரத்தையும் கொடுக்கவில்லை. ஆனால் ஒரு புதிய அரசை அமைப்பது, அதற்காக முதல்வரை கூப்பிட வேண்டும். யாருக்கு மெஜாரிட்டி போன்று அவருக்கு ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கு.

முக்கியமாக குடியரசுத் தலைவரையும், கவர்னரையும் ஒப்பிடாதீங்க. மாநிலங்களில் முதல்வர்கள் திறக்கிறார்கள் என்றால், கவர்னரை கூப்பிட்டால் நல்லது, அன்டர் ஸ்டான்டிங் இருந்தா கூப்பிடுவார்கள். தமிழிசை மாதிரி தகராறு செய்தால் கூப்பிட மாட்டார்கள். அதனால் அதனை குறைசொல்ல முடியாது.

ஆனால் குடியரசுத் தலைவர் அப்படி கிடையாது. அவர் மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவரை நீங்கள் கூப்பிடாமல் திறக்கிறீர்கள். ஒரு மலைசாதிப் பெண்ணை குடியரசுத் தலைவராக நியமித்தோம் என்று பெருமைப்படுகிறீர்கள். அந்த அம்மா ரிப்பன் கட் செய்து, புதிய பில்டிங்கினுள் செல்வதில் உங்களுக்கு என்ன பிரச்சினை?

ராம்நாத் கோவிந்த், மார்ச் 2018- காலத்தில் பூரி ஜெகநாத் கோவிலுக்குள் செல்ல முடியவில்லை. அவருக்கு என்ன பிரச்சினை? அதே பிரச்சினை இவருக்கும் உண்டா? யாருக்கு திரவுபதி முர்முக்கும் உண்டா? நான்கு வர்ணங்கள் இருந்தால் சமூகத்தில் அமைதி நிலவும் என்று கோல் வார்க்கர் சொன்னாரே. அதனை நீங்கள் காப்பாற்றி வருகிறீர்களா?

**நெறியாளர்:** இந்தப் பிரச்சினையைநீங்கள்தீண்டாமையில் கொண்டு வருகிறீர்களா.

**மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்:** நான் அந்த வார்த்தையை பயன்படுத்த விரும்பவில்லை. நான் முதலில் என்ன கூறினேன். குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அவர்களை வைத்துத் திறந்து இருந்தால் மோடி அவர்களின் பெருமை, இன்னும் பல மடங்கு உயரும்- உயர்ந்திருக்கும்.

இவ்வளவு தூரம் கட்டி நீங்கள் திறப்பதில், இன்றைக்கு அவர்களை கூப்பிடாததினால், அது மட்டுமல்ல அழைப்பிதழில் அவர்கள் பெயர் இல்லாமல் ஒரு பாராளுமன்றத்தின், ஜனநாயகத்தின் கோவிலை நீங்கள் திறப்பது என்பது நிச்சயமாக அது விமர்சனத்திற்குட்பட்டது.

எதிர்க்கட்சிகள் வந்து முர்முவை ஆதரிக்கவில்லை. அதனால் நீங்கள் கேட்கக்கூடாது என்று கூறுவது சரியில்லை. ஏன் என்றால் எங்களுக்கும் சேர்த்து தான் அவர் குடியரசுத் தலைவராக இருக்கிறார். அப்போது, அவர்களுக்கு ஒரு பிரச்சினை வரும்போது, அவர்களுடைய கௌரவம் குறைக்கப்படும் போது, அவர்களுடைய கண்ணியம் பாதிக்கப்படும்போது எதிர்க்கட்சிகள் கேட்பதற்கான உரிமை இருக்கின்றது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் ப்ரியன் விவாதத்தில் பேசினார்.

## எவரெஸ்ட் உச்சியைத் தொட்டுத் திரும்பிய

# முத்தமிழ்ச் செல்விக்கு முதல்வர் வாழ்த்து!

**சென்னை, மே 28 –**

**சென்னையைச் சேர்ந்த என். முத்தமிழ்ச்செல்வி எவரெஸ்ட் உச்சியைத் தொட்டு திரும்பியுள்ளார். இச்செய்தியறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

சென்னையைச் சார்ந்த திருமதி என். முத்தமிழ்ச் செல்வி அவர்கள் 2023ஆம் ஆண்டு “ஏசியன் டிரக்கிங் இன்டர்நேஷனல் நிறுவனம் “ மூலம் நேபாளம் தலைநகர் காட்மாண்டுவில் இருந்து புறப்பட்ட குழுவினருடன் இணைந்து உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் 8,848 மீட்டர் ஏறி சாதனை செய்ய திட்டமிட்டு 02.04.2023 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு நேபாளம் சென்றார். நேபாள அரசின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த எவரெஸ்ட் சிகரம் ஏறுதலில் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து ஏராளமானோர் பங்கேற்றனர். முத்தமிழ்ச் செல்வி அவர்கள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை செய்ய தமிழ்நாட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் பெண்.

இவர் 2023 ஏப்ரல் 2 ந்தேதி சென்னையிலிருந்து காட்மாண்டு சென்றார். ஏப்ரல் 5ந்தேதி கேம்பிற்கு (started to Base camp) பயணத்தை தொடங்கினார். ஏப்ரல் 19 ந்தேதி லோபுச் பகுதி உயரத்தை (20075 அடி - 6119 மீட்டர் உயரம்) (LOBUCHE PEAK SUMMIT 20075 feet - 6119 meter) அடைந்தார். மே 18 -ந் தேதி மவுண்ட் எவரெஸ்டுக்கு பயணத்தை தொடங்கினார். மே23ந்தேதி மவுண்ட் எவரெஸ்ட் பகுதியை வெற்றிகரமாக அடைந்தார். (MOUNT EVEREST SUMMIT 29035 FEET8848.86 METER completed successfully). மே 24ந் தேதி கேம்ப் 2 க்கு வந்து சேர்ந்தார்.

இச்செய்தியறிந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் “எவரெஸ்ட் உச்சியைத் தொட்டுத் திரும்பியுள்ள சாதனைப் பெண்மணி முத்தமிழ்ச் செல்வி அவர்களுக்கு வாழ்த்துகள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## உத்திரப்பிரதேசத்தில் - 6 ஆண்டுகளில்

# 186 பேரை சுட்டுக்கொன்ற பா.ஜ.க. அரசு!

## எந்த விசாரணையும் இன்றி என்கவுண்டர்!

*லக்னோ, மே 28 -*

*உத்தரப் பிரதேசத்தில் 2017ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. கோரக்பூர் மடாதிபதியும், இந்துத்துவா சாமியாருமான ஆதித்யநாத் முதல்வரானார். 2022 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று இரண்டாவது முறையாகவும் ஆதித்யநாத் முதல்வரானார். 6 ஆண்டுகளாக முதல்வராக இருக்கிறார். இந்நிலையில் தான், ஆதித்ய நாத்தின் இந்த 6 ஆண்டு ஆட்சியில், 186 பேர் எந்த விசாரணையும் இல்லாமல், கண்மூடித்தனமாக என்கவுண்ட்டர் முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. சராசரியாக 15 நாட்களுக்கு ஒருவர், உ.பி. காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார்.*

*உத்தரப் பிரதேச காவல் துறையிடம் பதிவான அதிகாரப்பூர்வ என்கவுண்ட்டர் புள்ளிவிவரங்களை, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏடு, புலனாய்வு செய்து வெளியிட்டுள்ளது.*

*உத்தரப் பிரதேசத்தில் உள்ள நன்தன்பூர் பகுதியைச் சேர்ந்த குர்மீட் என்பவர்தான், ஆதித்யநாத் பதவியேற்ற பிறகு என் கவுண்ட்டரில் கொலை செய்யப்பட்ட முதல் நபர். இச்சம்பவம் 2017, மார்ச் 31 அன்று நடைபெற்றது. கடைசியாக கடந்த மே 14 அன்று உமேஷ் சந்திரா (27), ரமேஷ் (40) ஆகியோர் என்கவுண்ட்டரில் சுட்டு கொல்லப்பட்டனர்.*

*இவ்வாறு 2017 மார்ச் மாதம் துவங்கி தற்போது வரை 186 பேர் என்கவுண்ட்டரில் கொல்லப்பட்டு உள்ளனர். 15 நாட்களுக்கு ஒரு முறை ஒருவர் காவல்துறையால் கொலை செய்யப்பட்டுள்ளார்.*

*அதுமட்டுல்ல, படுகொலைகள் தவிர, 5 ஆயிரத்து 46 பேர் காலில் சுடப்பட்டு காயமடைந்துள்ளனர். இதனைப் பொறுத்தவரை, சராசரியாக 15 நாட்களுக்கு ஒரு முறை 30க்கும் மேற்பட்ட நபர்கள் காவல் துறையினரால் காலில் சுடப்பட்டுள்ளனர்.*

*இவ்வாறு உ.பி. காவல்துறையால் சுட்டுக்கொல்லப்பட்ட 186 பேர்களில் 96 குற்றவாளிகள் கொலை குற்றம் செய்தவர்கள், 2 பேர் பாலியல் வன்கொடுமை, கும்பல் பாலியல் வன்கொடுமை மற்றும் போக்சோ குற்றம் செய்தவர்கள் என்று கூறப்படுகிறது.*

*பொதுவாக தங்களின் என்கவுண்ட்டர் கொலைகளுக்கு முன்கூட்டியே காரணத்தை உருவாக்குவது காவல்துறையினரின் வழக்கம். எனவே, கொலை செய்தார்கள், கொள்ளை அடித்தார்கள், வல்லுறவுக் குற்றத்தில் ஈடுபட்டார்கள் என்று சொல்வதில் ஆச்சரியம் இல்லை.*

*ஆனால், இந்த என்கவுண்ட்டர்களையொட்டி, மேற்கொள்ளப்பட வேண்டிய முறையான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை என்பதுதான், உ.பி. காவல் துறை மீது சந்தேகத்தை வரவழைக்கிறது.*

*ஒருவர் குற்றவாளியே ஆனாலும், அவர் காவல்துறையால் சுட்டுக்கொல்லப்படும் பட்சத்தில் மாஜிஸ்திரேட் விசாரணை நடைபெறும். அனைத்து என்கவுண்ட்டர்களுக்கும் இது பொருந்தும். ஆனால், 186 என்கவுண்ட்டரில் 161 என்கவுண்ட்டர் மரணங்கள் தொடர்பான மாஜிஸ்திரேட் விசாரணை நடைபெற்று முடிந்தும், இந்த விசாரணைகளின்போது, எந்த எதிர் கேள்வியும் அல்லது என்கவுண்ட்டர் தொடர்பான எந்த மறுப்பும் பதிவு செய்யப்படவில்லை என்பது அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.*

*அதுமட்டுமன்றி, 186 என்கவுண்ட்டர்களில் 156 வழக்குகளை முடித்து வைக்கும் அறிக்கை காவல் துறையினரால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. இதில் 141 என்கவுண்ட்டர் வழக்குகளை நீதிமன்றம் முடித்து வைக்க ஒப்புக்கொண்டுள்ளது. 15 வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.*

*என்கவுண்ட்டர் படுகொலைகளில், மீரட் பகுதியைச் சேர்ந்த காவல்துறையினர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர். அவர்கள் 65 பேரை என்கவுண்ட்டர் செய்துள்ளனர். வாரணாசி காவல்துறையினர் 20 மற்றும் ஆக்ரா காவல்துறையினர் 14 என என்கவுண்ட்டர்களை அரங்கேற்றியுள்ளனர்.*

*‘ஆப்ரேஷன் லங்கடா’ என்ற காவல்துறை நடவடிக்கையில் 2017 மார்ச் முதல் 2023 ஏப்ரல் வரை 5,046 பேர் காலில் சுடப்பட்டுள்ளனர். இதிலும் மீரட் பகுதிதான் முதல் இடத்தில் உள்ளது. இந்த பகுதியில் 1,752 தேடப்பட்ட குற்றவாளிகள் காவல்துறையினரால் சுடப்பட்டுள்ளனர்.*

*மீரட் பகுதி காவல்துறையினர் மட்டும் அதிகமான என்கவுண்ட்டர்களை நடத்து கிறார்களே. அது ஏன்? என்ற கேள்விக்கு, “மேற்கு உத்தரப்பிரதேசம் எப்போதுமே குற்றச் சம்பவங்கள் அதிகம் நடக்கும் பகுதியாகும்” என்று உத்தரப்பிரதேச காவல்துறை சிறப்பு டி.ஜி.பி. பிரஷாந்த் குமார் பதிலளித்துள்ளார்.*

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்-தங்கம் தென்னரசு முன்னிலையில்

# சங்கரன் கோவிலில் கூட்டுக் குடிநீர் திட்ட துவக்க விழா!

## அமைச்சர் கே.என்.நேரு பணிகளை துவக்கி வைத்தார்!

*தென்காசி,மே 28-*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டம் இணைந்த கூட்டுக்குடிநீர் திட்டம் ரூபாய் 543.20 கோடி,நெல்லை மாவட்டம் பாப்பாக்குடி ஒன்றியத்தைச் சார்ந்த 17 குக் கிராமங்கள் மற்றும் முக்கூடல் பேரூராட்சியின் ஒரு குக்கிராமம், தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியத்தைச் சார்ந்த 31 குக்கிராமங்களுக்கான தாமிரபரணி ஆற்றினை நீராதாரமாக கொண்ட கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 50.5 கோடி துவக்க விழா நிகழ்வு சங்கரன்கோவில் தற்காலிக பேருந்து நிலையம் அருகில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன்,நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*நிகழ்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு பங்கேற்று பணிகளை துவக்கி வைத்தார்.*

*தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டம் இணைந்த கூட்டுக் குடிநீர் திட்டம் துவக்க விழா நிகழ்வு சங்கரன்கோவிலில் தற்காலிக பேருந்து நிலையம் அருகில் தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை.இரவிச்சந்திரன் தலைமையில்,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்,நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஷிவ்தாஸ்மீனா, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேலாண்மை இயக்குனர் தட்சணாமூர்த்தி,நகராட்சி நிர்வாக இயக்குனர் பொன்னையா, தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்எல்ஏ,தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம்.குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன் திருமலை குமார், ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தங்கபாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. தலைமை பொறியாளர் ரகுபதி வரவேற்புரையாற்றினார்.*

*நிகழ்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு பங்கேற்று குடிநீர் திட்ட பணிகளை துவக்கி வைத்து பேசியதாவது:-*

*தமிழ்நாடு அரசு குடிநீர் வழங்கல் துறையில் இந்தியாவில் 26 ஆம் இடத்தில் இருந்து முதல் இடத்திற்கு வந்துள்ளது. அதற்கான முதல் பரிசையும் பெற்றிருக்கிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிர்வாக திறமையே இதற்கு எடுத்துக் காட்டாகும். கிராமங்கள் தோறும் ஏழை மக்களுக்கு பாதுகாக்கப்பட்டு குடிநீர் வழங்க வேண்டும் என முதலமைச்சர் நிதியை ஒதுக்கி வருகிறார்கள். தென்காசி மாவட்டத்தில் கடையநல்லூர், புளியங்குடி, சங்கரன்கோவில், செங்கோட்டை, சுரண்டை, தென்காசி நகராட்சிகளில் ரூபாய் 44 கோடியே 82 மதிப்பில் சாலை பணிகள்,1.28 கோடி மதிப்பில் குடிநீர் வடிகால் பணிகள், 4.03 கோடி செலவில் மேலாண்மை பணிகளுக்கு வாகனங்கள்,15.37 கோடி செலவில் எல்.இ.டி. தெருவிளக்குகள், 3.38 கோடி மதிப்பில் குடிநீர் பணிகள், 4.62 கோடி மதிப்பில் நீர் நிலைகள், 5.93 கோடி மதிப்பில் பூங்காக்கள்,8.85 கோடி மதிப்பில் மின் மயானங்கள்,9 கோடி மதிப்பில் பேருந்து நிலையம், 21.12 கோடி மதிப்பீட்டில் மார்க்கெட், 60 லட்சம் மதிப்பீட்டில் அலுவலக கட்டிடங்கள்,3.3 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் 36.84 கோடி மதிப்பீட்டில் இதரப் பணிகள் என தென்காசி மாவட்டத்தில் மட்டும் கடந்த 2 ஆண்டுகளில் ரூபாய் 150 கோடியே 61 லட்சம் மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குடிநீர் திட்டத்தையும் சேர்த்து மொத்தத்தில் ரூபாய் 650 கோடியை முதலமைச்சர் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வழங்கி இருக்கிறார்.*

*இவ்வாறு அமைச்சர் கே.என். நேரு பேசினார்.*

*பின்னர் அமைச்சர் கே.என். நேரு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.*

*செண்பகவல்லி அணை கட்டுவது தொடர்பாக கேரளா அரசோடு நீர் வளத்துறை அமைச்சர் பேசி வருகிறார். புளியங்குடி கோட்டை மலைஆறு குடிநீர் திட்டத்தில் உள்ள குழாய் உடைப்பை இன்னும் ஒரு வாரத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். தாமிரபரணியை ஆதாரமாகக் கொண்டு நீர் எடுத்தால் பற்றாக்குறை வருகிறது. எனவே மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் நீர் வளம் நிறைய இருப்பதாக கூறப்படுகிறது.அந்தப் பகுதியிலே ஆழ் குழாய் அமைத்து உரிய கிணறு மூலமாக அந்த பகுதிகளுக்கும் மற்ற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்க குடிநீர் வழங்கல் துறை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் என்று கூறினார்.*

*இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேல்,பரமகுரு,சீனிவாசன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி,பொதுக்குழு உறுப்பினர்கள் மாரிச்சாமி,வேல்ச்சாமி பாண்டியன்,தேவா,வெள்ளத்துரை, சாகுல் ஹமீது,மாரிச்சாமி, பராசக்தி, மகேஸ்வரி, ஒன்றியக் குழு தலைவர்கள் லாலா சங்கரபாண்டியன் (சங்கரன்கோவில்) பொன். முத்தையா பாண்டியன் (வாசுதேவநல்லூர்) நகர மன்ற தலைவர்கள் உமாமகேஸ்வரி (சங்கரன்கோவில்)விஜயா (புளியங்குடி)*

*மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன், பொருளாளர் சரவணன்,துணை செயலாளர்கள் புனிதா,ராஜதுரை, மனோகரன்,ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை,பூசைபாண்டியன், கிறிஸ்டோபர், சேர்மதுரை,ராமச்சந்திரன் பெரியதுரை,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ் (சங்கரன் கோவில்) அந்தோணிசாமி (புளியங்குடி) மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சுப்பையா,வர்த்தக அணி முனியசாமி ஆர்.எஸ்.சரவணன்,மைக்கேல் நெல்சன், அன்புமணி, அண்ணாமலை உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.*

*நிகழ்ச்சி நிறைவில் குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளர் செந்தூர்பாண்டி நன்றி உரையாற்றினார்.*

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில்

# கல்வி உதவித் தொகையுடன் தமிழ் முதுகலை பட்டப்படிப்பு!

## மாணவர் சேர்க்கை தொடக்கம்!

*சென்னை, மே.28-*

*தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழக அரசால் தோற்றுவிக்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

*அவ்வகையில் தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்புடன், தமிழ் முதுகலை (M.A. Tamil), இந்நிறுவனத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப் பெற்று வருகின்றன. 2023-24ஆம் கல்வியாண்டிற்கான மேல்குறிப்பிட்டுள்ள பட்டப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்பெறவுள்ளது.*

*விண்ணப்பங்கள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக வலைத்தளத்தில் (www.tamiluniversity.ac.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அஞ்சல் வழியிலும் பெற்றுக் கொள்ளலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வழியாக இப்பட்டப் படிப்பினை பயில விரும்புவோர் சேர்க்கைத் தொடர்பான விதிமுறைகள்/தகவல்களை www.ulakaththamizh.in என்ற இணைய முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.*

*இவ்வகுப்பில் சேர்க்கைப் பெறும் மாணவர்களுள் நுழைவுத்தேர்வு மதிப்பெண் அடிப்படையில் 15 மாணவர்களுக்கு தமிழக அரசால் கல்வி உதவித் தொகையாக மாதம் தோறும் ரூ.2000/ வீதம் வழங்கப்படும்.*

*இருபாலருக்கெனத் தனித் தனியே கட்டணம் இல்லா தங்கும் விடுதி வசதி உள்ளன. முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.*

*நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இறுதியாகப் படித்த கல்விச் சான்று மற்றும் மாற்றுச்சான்றிதழ் (சான்றொப்பமிடப்பட்டது) நகலுடன் இணைத்து இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை600113 என்ற முகவரிக்கு அனுப்பப் பெறுதல் வேண்டும். விண்ணப்பம் (கட்செவி (WhatsApp) எண் குறிப்பிட்டு) வந்து சேர வேண்டிய இறுதி நாள் 20.06.2023 ஆகும். மேலும் தகவல்பெற இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை600113 (தொலைபேசி04422542992) என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.*



சிவகங்கையில் நலத்திட்ட உதவிகளை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித், எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. நகர்மன்றத் தலைவர் துரைஆனந்த், மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில்குமார், ஊராட்சி மன்றத்தலைவர் கே.எஸ்.எம்.மணிமுத்து, பேரூராட்சி மன்றத்தலைவர் த.சேங்கைமாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.